1993 ஏப்ரல் 19]

399—

சத்துணவு மையங்களில் பட்டியலில் சேராத குழந்தைகளைச் சேர்த்தல்.

* 9945—திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களில் பட்டியலில் சேராமல் விடுபட்டிருக்கும் பள்ளிக் குழந்தைகளைச் சரிபார்த்துச் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசு நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறது.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பள்ளிகளிலே மாணவர்கள் இரண்டாவது வகுப்பு, மூன்றாவது வகுப்புக்கு வந்த பின்னாலும் கூட அவர்களுடைய பெயர்— ஏழை மாணவர்களினுடைய பெயர்கள் கூட, சில இடங்களில் இந்தப் பட்டியலில் சேர்க்காமல் விடுபட்டிருப்பதால், அந்த மாணவர்கள் பெருந் துன்பத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைகள் போன்ற சலுகைகள் கூட கிடைக்காத நிலைமை இருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு, இந்த ஆண்டு அப்படி விடுபட்ட மாணவர்களின் பெயரைக் கண்டுபிடித்து பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் வருகை தரும் ஏழை மாணவர்கள் அனைவருக்கும் சத்துணவு தரப்பட வேண்டுமென்பது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியின் கொள்கையாகும். ஒவ்வோர் ஆண்டும் பள்ளிகள் துவக்கப்பட்டவுடன், புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்களையும் சேர்த்து சத்துணவு மையங்களில் உணவு உண்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 30 ஆம் தேதி நிர்ணயிக்கப்படுகிறது. சில பள்ளிகளில் ஒரு சில மாணவர்கள் வசதி மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் வீட்டுக்குச் சென்று மதிய உணவு உண்ணும் அல்லது வீட்டிலிருந்து உணவு கொண்டு வரும் நிலையில் இருப்பதாலும்,

சிலர் இந்தத் திட்டத்தில் சேராமல் விடுபட்டுள்ளார்கள். மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திருமதி பழனியம்மாள் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சீருடை வழங்குவதற்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் பெறுவதற்கும் சத்துணவுத் திட்டம் அடிப்படையாக இருந்தது. ஆனால் மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சத்துணவு சாப்பிடுகிறவர்களுக்கு மட்டுமல்ல வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற வருமான வரம்பைப் பெற்றிருக்கிற அனைவருக்கும் இலவசச் சீருடை, இலவச காலணி, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால், தினந்தோறும் சாப்பிடவில்லை என்றாலும் அவர்களுக்குத் தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 400, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

400—

சேலத்தில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 11078—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம் சூரமங்கலம் கிராமத்தில் தொழில் வணிகத் துறையின் கீழ் வருவாய்த்துறையின் மூலமாக பெறப்பட்ட 25 ஏக்கர் நிலத்தில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை இருக்கிறது.